**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.69** **நாள் : 01.02.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில், மெரினா நீலக்கொடி கடற்கரைப் பகுதியில் இன்று (01.02.2026) நடைபெற்ற மெரினாவில் கலைவிழா நிகழ்ச்சியில் ரஷியா நாட்டின் கலைஞர்கள் பங்கேற்ற ரஷியா நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சி மற்றும் தமிழ்நாடு கிராமிய கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டு மகிழ்ந்தனர்.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் உள்ள மெரினா கடற்கரை, பெசன்ட் நகர் கடற்கரை, திருவான்மியூர் கடற்கரை உள்ளிட்ட அனைத்து கடற்கரைப் பகுதிகளில் மக்களின் வசதிக்காகவும், சிறந்த சுற்றுச்சூழலை ஏற்படுத்திடும் வகையிலும், பல்வேறு கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டு தூய்மையாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மெரினா கடற்கரையில், மெரினா நீச்சல் குளம் அமைந்துள்ள பகுதியில் உலகத்தரம் வாய்ந்த நீலக்கொடி சான்றுக்கான மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, இந்த நீலக்கொடி கடற்கரைப் பகுதிக்கு, மக்கள் பெருமளவில் வருகை தருகின்றனர். இந்நிலையில், இங்கு வரும் மக்களின் மகிழ்விற்காகவும், தமிழ்நாட்டின் பாரம்பரியக் கலைகளை மக்களிடம் கொண்டு செல்லும் வகையிலும், இந்த கலைகளை மக்களிடம் கொண்டு செல்லும் கலைஞர்களுக்கு ஆதரவளித்து அவர்களை ஊக்கப்படுத்திடும் வகையிலும் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில், மெரினாவில் உள்ள நீலக்கொடி கடற்கரைப் பகுதியில், தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் உள்ள நாட்டுப்புறக் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் 21.09.2025 முதல் ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமையன்று மாலையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் மெரினா நீலக்கொடி கடற்கரைப் பகுதியில் நடத்தப்படுகிறது.

இதன் தொடச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில், மெரினா நீலக்கொடி கடற்கரைப் பகுதியில் இன்று (01.02.2026) நடைபெற்ற மெரினாவில் கலைவிழா நிகழ்ச்சியில் ரஷியா நாட்டின் கலைஞர்கள் பங்கேற்ற ரஷியா நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சி மற்றும் தமிழ்நாடு கிராமிய கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது இந்த கலை நிகழ்ச்சியினை ஆயிரக்கணக்கான மக்கள் பார்வையிட்டு மகிழ்ந்தனர்.

இந்த கலை நிகழ்ச்சிகளில் 80க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கேற்று சிறப்பாக கலை நிகழ்ச்சிகளை நடத்தினர்.

இந்த கலை விழாவில் மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள், பங்கேற்று, சென்னையில் உள்ள ரஷியா அறிவியல் மற்றும் கலாச்சார மையத்தின் இயக்குநர் திரு. அலெக்சாண்டர் டோடோநௌ, கலைக்குழுவின் தலைவர் திருமதி எலினா மற்றும் ரஷியா நாட்டின் கலைஞர்கள் மற்றும் தமிழ்நாடு கிராமிய கலைஞர்களைப் பாராட்டினார். இந்நிகழ்வில், மத்திய வட்டார துணை ஆணையர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மற்றும் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**